# 2019 ஆடிமாத சங்க குடும்ப தின நற்செய்தி

## *பலியாகிய, வீற்றிருக்கின்றவராக, உணவாகிய திவ்விய நற்கருணை நாதரினுள் தந்தையின் தாய்மையின் அன்பு*

01. ஆரம்ப புகழ்ச்சி
புபுது பாடல் இல. 10 "தூய ஆவியானவரே ….."

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்

**"…. கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார்.** (1 யோவான் 4:16)

இறை சாயல் சமத்துவத்தின் பரிசாக பெற்று இவ்வுலகில் பிறந்த மனிதன் சுயநலத்தின் மமதயில் பாவத்திற்கு அடிமையாகி தமக்கு சொந்தமான உரிமையை அழித்து கொள்ள முயன்றாலும் அன்பாகிய இறைவன் மனிதனாக தாழ்மையாகினார். சர்வவல்லமைமிக்க இறைவன் மனுவுருவாகி எம்மோடு வாசம் செய்வதற்கு வந்தருளினார். திவ்விய நற்கருணை நாதரினுள் தாய் தன் குழந்தையை போசிப்பது போல, தந்தையை போல தம் பிள்ளைகளை பாதுகாக்கும் இறைவனுக்கு வந்தனையை நமஸ்காரத்தை புகழ்ச்சியை செலுத்துவதற்கு நாம் ஆயத்தமாவோம். .
புபுது பாடல் 129

03. மீளப் பார்த்தல்
   i. அப்பா தந்தையே அப்பா அன்னையே என்று அழைத்தவாறு மிகவும் நெருக்கமாக இறைவனின் தந்தையின் தாய்மையின் அன்பை அனுபவிப்பதற்கு முடியுமாகிய சந்தர்ப்பங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.
   ii. உங்கள் மூலமாக இறை தந்தையின், தந்தையின் அன்பை தாய்மையின் அன்பை மற்றவர்கள் அனுபவித்த சந்தர்ப்பங்கள் இருக்கின்றதா?

04. நாளுக்குரிய நற்செய்தி
**பழியாகிய, வீற்றிருக்கின்றவராக, உணவாகிய திவ்விய நற்கருணை நாதரினுள் தந்தையின் - தாய்மையின் அன்பு மகா மறைரகசியமாகும்.**

**i. பலியாகிய, திவ்விய நற்கருணை நாதரினுள் தந்தையின் - தாய்மையின் அன்பு**

- திவ்விய நற்கருணையின் பலியினுள் நிலைத்திருக்கும் அகிலத்தின் தியாகக் குணம், இயேசு கிறிஸ்துநாதரின் வார்த்தைகளினால் எமக்கு தெளிவாகின்றது. திவ்விய நற்கருணை நிலைநிறுத்தும் போது அவர் சாதரணமாக 'இது எனது சரீரம்' 'இது எனது இரத்தம்' என்று கூறாமல் உங்களுக்காக சிந்தப்படும் என்ற வசனத்தையும் சேர்த்து கூறினார். தாய் தன் குழந்தைக்கு தனது இரத்தத்தை பாலாக மாற்றி குடிப்பதற்கு கொடுப்பது போல் இறைவன் மனுவுருவாகிய இறை ஆண்டவராக இரத்தத்தை சிந்தி பலியாகி இறை மக்களை போசிக்கின்றார்.

- அனைவரதும் விடுதலைக்காக சிலுவை மீது பலியாகுகின்ற அவரது பலி அருட்சாதனத்தின் வழியாக நிலைத்திருக்க செய்தவாறு பலியாகிய திவ்வியநற்கருணை நாதரினுள் தந்தையின் தாய்மையின் அன்பை ஒவ்வொரு திருப்பலியிலும் அனுபவிப்பதற்கு வழிவகுத்து இருக்கின்றார்.

ii. **வீற்றிருக்கின்றவராக திவ்விய நற்கருணை நாதரினுள் தந்தையின் - தாய்மையின் அன்பு "எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்." (புனித மத்தேயு 28:20)**

திவ்விய நற்கருணைநாதர் என்பவர் இறைவனது அன்பின் ஜீவனை எமது கண்களினால் காணச் செய்கின்ற, ஸ்பரிசிகின்ற எமது இதயத்திற்கு தோன்றுகின்ற அருட்சாதனத்தின் வெளிப்பாடாவார். திவ்விய நற்கருணைநாதர் இறைவனது திருச்சபை என்னும் பிள்ளையுடன் சதாகாலத்திற்கும் வாசம் செய்வதையே அதன் வழியாக உறுதிப்படுத்தபடுகின்றது. இரவு பகலாக தமது பிள்ளைகளை கண்நோக்கி பார்த்து கொண்டிருக்கின்ற அன்னையாக, அவர்களை பாதுகாக்கின்ற தந்தையாக இறை மகத்ததுவமிக்கவரின் தந்தையின் தாயின் அன்பை திவ்விய நற்கருணை நாதரின் வீற்றிருத்தல் வழியாக அனுபவிக்க முடியும்.

iii. **உணவாகிய திவ்விய நற்கருணை நாதரினுள் தந்தையின் - தாய்மையின் அன்பு**

- "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்." (புனித யோவான் 6:51-58)

- இவ் ஜீவனுள்ள உணவாக தமது சரீரத்தை வெளிப்படுத்துகின்றார். இயேசு கிறிஸ்துநாதர் தமது வாழ்வையுமே எமக்காக பலியாக்கியவாறு ஜீவனுள்ள உணவாகி எம்முள் இல்லாமல் போகின்றார். எம்மை உருவாக்கின்றார்.
- தமது மக்களை போசிப்பதற்காக இறைவனுள் இருந்த ஆசை விடுதலைப்பயணத்தில் 'மன்னா' கொடுப்பதன் வழியாக (விடுதலைப்பயணம் 16:31-36) புதிய ஏற்பாட்டினுள் ஐய்யாயிரம் பேருக்கு உணவு கொடுத்தல் புதுமையின் வழியாக (புனித யோவான் 6:4-15) வெளிப்பாடாகுவது இறைவனது தந்தையின் தாயின் அன்பாகும். உணவை எக்கணமும் அருந்திய பின்பு அது மனிதனின் ஒரு பகுதியாகின்றது. இவ்வாறு நிகழ்காலத்தில் திவ்விய நற்கருணை நாதர் எமது வாழ்விற்கு உணவாக இறைவனது தந்தையின் தாயின் அன்பை எடுத்து வருகின்றார்.

05. செயல்படத்துவதற்காக :

i. … வார்த்தைகளை வெளிப்படுத்தும் போது திவ்விய நற்கருணை கிறிஸ்துநாதருடன் ஒன்றிணைந்து, முழு மனதுடன் அப்பா தந்தையின் அப்பா அன்னையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு முழுமையான ஒன்றிணங்குதலை, விருப்பத்தை வெளிப்படுத்துகின்றோம். அதற்கு தாகம் கொள்வோம்.

ii. அவ்வாறு திருப்பலியில் தொடர்பு கொண்டு தெய்வீக உணவை பெற்றுக் கொள்வதற்கு நாம் சரீர, மன ரீதியாக ஆயத்தமாவோம். நாம் அணிகின்ற, உடுத்துகின்றவகைளைப் பற்றியும், உணவிற்கு முன்பு சரீர உபவாசமும் மிகவும் முக்கியமாகும்.

iii. வாரம் முழுவதும் நாம் பெற்ற பலவிதமான அனுபவங்களை (துன்பம். மகிழ்ச்சி, பிரச்சினைகள் அனைத்தும்) முன்கொண்டு நன்றி கூறியவாறு அப்பா தந்தை அப்பா அன்னை முன்னிலையில் தோன்றி நிற்போம்.

iv. குடும்பமாக விசேடமாக ஞாயிற்றுக்கிழமைக்கான வாசகங்களை தியானித்து ஆயத்தமாவோம்.

06. இறுதி செபம்

- திவ்விய நற்கருணை நாதர் ஒரு பலியாவார். வீற்றிருப்பவராவார், உணவு ஆவார். இம் மகா ஆழமான சத்தியத்தை அனுபவிப்பதற்கு வரத்தை வேண்டி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கேட்டு செபிப்போம்.
- புபுது பாடல் இல. 113

உங்கள் கவனத்திற்கு:

- 2019 ஆடி மாதம் 16ம் திகதி செவ்வாய்கிழமை (பௌர்ணமி தினம்) சுரெந்தி மகள்மாரின் வருடாந்த தினமாகும். மு.ப. 09.00 – பி.ப. 04.00 மணி வரை ஸ்ரீ பிரசங்சாராமையில் நடைபெறும்.
- 2019 ஆடி மாதம் 20-21 தினங்களில் பொறுப்பு வகிக்கும் அனைவருக்கான பாசரை 20ம் திகதி மு.ப. 9.30 – 21ம் திகதி மதிய உணவு வரை ஸ்ரீ பிரசங்சாராமையில் நடைபெறும்.